திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் :திரு.எஸ்.ஜோசப்ஆரோக்கியராஜ்.

ந.க.எண் : 1116/2019/ஊ.வ.1

நாள் :06 .08.2019.

பொருள் : நேரடி நியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2015 -2016, 2016-2017 மற்றும் 2017-2018 - இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வுசெய்யப்பட்டவர்கள் பணியேற்றது - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை. கடித எண்: 890/PSD-C3 /2019 நாள்: 18.02.2019.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயலாணை ந.க.எண்:1116/2019 / ஊ.வ.1 நாள்:06.03.2019.
3. தனியர்களின் பணிப்பதிவேடுகள்

**********

ஆணை :

பார்வை 1 இல் காணும் கடிதம் வாயிலாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015 -2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பதவிகளுக்கான தொகுதி IV போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று, திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 6 இளநிலை உதவியாளர்களின் ஏற்பளிக்கப்பட்டோர் பட்டியல் பெறப்பட்டது.

அவர்களுக்கு பார்வை 2 இல் காணும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டது. பணி நியமன ஆணை வழங்கப்பட்ட 6 நபர்கள் கீழ்க்காணும் விவரப்படி அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் இம்மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் அலுவலகம் (திருவாளர்கள் | பணியேற்றுக் கொண்ட நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பிரபுவி.,<br>இளநிலைஉ உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், பழனி | 09.03.2019 மு.ப | 09.03.2019 மு.ப |
| 2 | ஜி.மோகனபிரியா,<br>இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு),<br>திண்டுக்கல் | 09.03.2019 மு.ப | 09.03.2019 மு.ப |

| வ. எண் | பெயர், பதவி மற்றும் அலுவலகம் (திருவாளர்கள் | பணியேற்றுக் கொண்ட நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 3 | ஆர்.சிவகுமார், இளநிலை உதவியாளர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், திண்டுக்கல். | 09.03.2019 மு.ப | 09.03.2019 மு.ப |
| 4 | ஜெஜாஸ்மின்வின்னரசி, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், வடமதுரை. | 09.03.2019 மு.ப | 09.03.2019 மு.ப |
| 5 | கே.கே.கௌதம், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், வேடசந்தூர். | 09.03.2019 மு.ப | 09.03.2019 மு.ப |
| 6 | பி.வேல்முருகன், இளநிலை உதவியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல். | 09.03.2019 மு.ப | 09.03.2019 மு.ப |

மேற்காணும் 6 இளநிலை உதவியாளர்களுக்கும் கலம் எண் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்கள் இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாள் முதல் பார்வை 1 இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானதாகும்.
2. "The regularization is subject to the outcome of the Writ Petitions pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services for the year 2015-2016, 2016-2017 and 2017-2018 recruitment"
3. பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு தொடர் பணிக்காலம் தகுதிகாண் பருவக்காலமாக கருதப்படும்.
4. தகுதிகாண் பருவக்காலத்திற்குள் அரசாணை நிலை எண்.33 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை நாள்.02.03.2017-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான அனைத்துத்துறை தேர்வுகளிலும் தேர்ச்சி பெறவேண்டும் மேலும், பவானிசாகர் அடிப்படைப்பயிற்சியை முடித்திட வேண்டும்.

5. தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதற்கான தகுதிகளை 5 ஆண்டுகளுக்குள் பெறவில்லையெனில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

தனியர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்வதுடன் மேலே கண்டுள்ள நிபந்தனைகளையும் சேர்த்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென தொடர்புடைய அலுவலகத் தலைமையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியருக்காக,
திண்டுக்கல்.

பெறுநர் :-

தொடர்புடையோர் (உரிய வழிமுறையாக) - (சார்வு செய்து சார்வு நகல் அனுப்பி வைக்க)

நகல் :- 1) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல்.
2) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திண்டுக்கல்.
3) வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ), பழனி, வடமதுரை மற்றும் வேடசந்தூர்.
4). ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு.
5) ஊ.6 பிரிவு.